**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.104/2020**

| | | |
|---|---|---|
| **NAME** | : | லலிதா |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 09.11.2022.**

குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஜெகதாம்பாளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று முன் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஜெகதாம்பாளின் அம்மா பெயர் பாக்கியம்மாள். ராமசாமி கவுண்டர் என் மாமனார். கண்ணப்பா கவுண்டர் என் சின்ன மாமனார். அவர்கள் இரண்டு பேருக்குள் பாகப்பிரிவினை ஆகிவிட்டது. பத்திரம் போட்டுள்ளேன். ராமசாமி கவுண்டர், ஜெகதாம்பாளுக்கு செட்டில்மெண்ட் செய்துவைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். என்னென்ன சொத்து ஜெகதாம்பாளுக்கு எழுதினார் என்ற விவரம் தெரியுமா என்றால் 32-1/2 மற்றும் 14 செண்ட். அந்த நிலத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. சர்வே எண்கள் 29,30 இருக்கும். ஜெகதாம்பாள் சர்வே எண்ணில் 31ல் 65 செண்ட் பாக்கியம்மாள் 22.12.1941ல் கிரயம் பெற்றார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த 65செண்டில் 32-1/2 செண்ட் ஜெகதாம்பாளுக்கு, பாக்கியம்மாள் செட்டில்மெண்ட் செய்தார்கள் என்றால் ஆமாம். அது அவருடைய சொத்துதான் என்றால் இல்லை, என் வீட்டுக்காரருக்கும் பங்கு உண்டு. ஜெகதாம்பாளுக்கு என் வீட்டுக்காரர் மகன். ஜெகதாம்பாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் ஆமாம். (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.